05.02.2026

O.S.No.274/2011

வா.சா.1.திரு.போஸ், த.பெ.திரு.பாண்டியன்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1) எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 3ல் பிரதிவாதிகள் உறவினர் அடிப்படையில் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தாவா சொத்து காலியாக இருந்ததால் சட்ட விரோத சுமைகள் ஏற்படுத்தாமல் தேவைக்கேற்ப தாவா சொத்தை காலி செய்ய வேண்டுமென்ற நிபந்தனைபேரில் தாவா சொத்தை 2006ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தி அனுபவித்த வந்தேன் என்று சொல்லியுள்ளது சம்மந்தமாக ஏதேனும் ஆவணங்கள் எழுதப்பட்டுள்ளதா என்றால் உறவினர் அடிப்படையில் வாய்மொழியாக கொடுக்கப்பட்டது. தாவா சொத்தில் நான் வீடு கட்டுவதற்கு முன்பாகே பிரதிவாதிகள் வீடு கட்டி குடியிருந்த வந்தனர் என்றால் இல்லை எனக்கு லோன் அப்புரவல் ஆகி வந்தபோதுதான் பிரதிவாதிகள் வீடு கட்டினார்கள். எனக்கு லோன் அப்புரவல் ஆகி வந்தபோதுதான் பிரதிவாதிகள் வீடு கட்டினார்கள் என்ற விவரத்தை என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது தாயார் கிரையம் வாங்கிய ஆவணத்தில் நான்கு மால் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது தாயார் கிரையம் வாங்கி ஆவணத்தில் நான்குமாலில் பிரதிவாதிகள் செல்லும் பாதை என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆவணத்தில் இல்லை. 1993ம் ஆண்டு பின்புதான் பட்டா கொடுத்தார்கள். அதன்பின்புதான் பாதையாக உள்ளது.

2) நான் பிரதிவாதிகள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும் காவல் துறையினர் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதி உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் கொடுத்த மனு சம்மந்தமாக காவல் துறையினர் விசாரணை செய்து எனக்கு அந்த பகுதியில் பாதை இல்லை என்று சொல்லி மனுவை முடித்துவிட்டார்கள் என்றால் இல்லை. நீதிமன்றம் மூலம் பரிகாரம் கேட்க சொல்லிவிட்டார்கள்.

3) நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள 29.11.2010ம் தேதி நான் மதுரை வடக்கு தாலூகா தாசில்தாரிடம் சொத்தை அளக்க கேட்டு மனு கொடுத்தேன் என்றும் அதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க வில்லை என்று சொல்லியுள்ளது உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் கொடுத்த மனு சம்மந்தமாக சர்வேயர் தாவா சொத்தை அளந்து எனக்கு பாதை இல்லை என்று சொல்லிவிட்டார் என்றால் இல்லை.

4) நான் சொல்வதுபோல் தாவா சொத்தில் பிரதிவாதியின் வீட்டு பக்கத்தில் எந்த ஒருபாதையும் பயன்படுத்தப்படவில்லை என்றாலும் அது பிரதிவாதியின் சொத்து என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை:</u> இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.